ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

विरिञ्चिस्वर्गेशप्रभृतिविबुधानामसुलभं
यदाप्तुं योगीशास्त्वनभुवि तपस्यन्ति सततम् ।
यदिष्टं भक्तानां कलयति हरे ते करुणया
भवेयं धन्यस्तच्चरणमिह लब्ध्वा हृदि कदा ॥

𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌿𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇𑌶𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌨𑌾𑌮𑌸𑍁𑌲𑌭𑌂
𑌯𑌦𑌾𑌪𑍍𑌤𑍁𑌂 𑌯𑍋𑌗𑍀𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌭𑍁𑌵𑌿 𑌤𑌪𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌤𑌤𑌂 ।
𑌯𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌲𑌯𑌤𑌿 𑌹𑌰𑍇 𑌤𑍇 𑌕𑌰𑍁𑌣𑌯𑌾
𑌭𑌵𑍇𑌯𑌂 𑌧𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌚𑍍𑌚𑌰𑌣𑌮𑌿𑌹 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌹𑍃𑌦𑌿 𑌕𑌦𑌾 ॥

யாதொரு சரணமானது பிர்மா இந்திரன் முதலான தேவதைகளா லும் சுலபமாக அடைய முடியாதோ யாதொரு சரணத்தை அடைய வேண்டி சிறந்த யோகிகள் அரண்யப் பிரதேசத்தில் எப்பொழுதும் தவம் புரிகின்றார்களோ யாதொன்றானது தம்பக்தர்களுக்கு விரும்பி யதையெல்லாம் அளிக்கின்றதோ ஹே ஹரே ! ஹே புருஷோத்தம உம்முடைய அனுக்கிரஹபலத்தால் அவ்வித மஹிமைபெற்ற அந்தச் சரணத்தை எந்த ஸமயத்தில் எனது ஹிருதயத்தில் அடைந்து ஜன்ம ஸாபல்யத்தைப்பெறப் போகிறேன்.

ஒரு பக்தர் ஸ்ரீ பகவானிடம் பிரார்த்திக்கின்றார். ஹே விஷ்ணோ உமது சரணாவிந்தங்களை என் ஹிருதயகமலத்தில் இடைவிடா மல் எப்பொழுதும் தியானம் செய்துகொண்டு இம்மானிடப் பிறவியை ஸபலமாகச் செய்து தன்யனாகவேண்டுமென்று விரும்புகின்றேன். தேவர் கள் முனிவர்கள் முதலாயினோர்களுக்குக் கூட சுலபமாய் கிடைக்காத அச்சரணமானது எம்போன்றவர்களுக்குக் கிடைப்பது அரிதிலுமரி தே. ஆயினும் உமது கருணையிருந்தால் எதையும் சுலபமாக அடையலா மென்கிற நம்பிக்கை எனக்கிருப்பதால் தயவு செய்து தங்களுடைய கரு ணைக்கு என்னைப்பாத்திரனாகச் செய்து எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். சுபம் !

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

பிரபவ-ஹு தை-மீ௴ கருஉ


## ஸம்ஸ்காரம்.

### 5-வது நாமகரணம்.

பெயரிடுவது ஒரு ஸம்ஸ்காரமெனக் கூறப்பட்டது. ஸம்ஸ்காரமென்றால் தோஷத்தை விலக்குவதும் குணத்தைப் புகட்டுவதுமாகும். பெயரிடுவதால் எந்த தோஷம் விலகுகின்றது எந்த குணமுண்டாகின்றது என்று சிலர் ஆசங்கை கொள்ளுகின்றனர். அதற்கு ஸமாதனமிதுவாம். கர்மவசத்தால் அங்குமிங்குமாகச்சுற்றிச்சுயட்டப்பட்டுஸ்தாவர ஜன்மத்திலும்ஜங்கமபாவத்தில் பசு, பக்ஷி முதலிய திர்யக்ஜன்மத்திலும் திரிந்துகொண்டு வரும் ஜீவன் ஒரு கட்டுக்கும் அகப்படாமலிருக்கின்றானும் அதனாற்றான் ஒருவர்வார்த்தைக்கும் கட்டுப்படாமல் காலத்தை வீணாகக் கழிப்பவனைத் "தன்கொண்டிமாடாய்த்திரிகிறான்" என்றுமாட்டுக்கொப்பாகக் கூறியிருக்கிறார்கள் அதனாற்றான் ஜிவனைக்கட்டிலடக்கிக் காரியத்தை விதித்துக் காப்பாற்ற வந்த வேதமும் பசு பக்ஷி, முதலியவைகளாக ஜீவன் ஜனித்தபோது அவனைக் கர்மயோகத்தில் கட்டுப்படுத்த வில்லையாம். இதுவே பெருத்த தோஷமாம். முன் கடந்த ஏதோ ஒரு மானிட ஜன்மத்திற் செய்ததோர் நற்க்ரியையின் சேஷத்தின் பயனாக மீண்டும் மானிடப் பிறவி நேர்ந்தால் அப்பொழுது அந்த ஜீவனுக்கு அன்னையின் கர்ப்பாசயத்திலிருக்கும்போதே "இனி நான் முன்போல் கொண்டியாய்த் திரியாமல் ஒரு கட்டுப்பாட்டிலிருந்து வரவேண்டும்" என்ற பகுத்தறிவு உண்டாகின்றதாம். இதன் விரிவு ஆர்யதர்மத்தின் 12-வது ஹுத்திய 7-வது ஸஞ்சிகையில் காணலாம். அத்தகைய விவேகமுண்டானபடியால் பரமேசுவரனும் அவரது ஆக்ஞைப்படி ஒவ்வொரு அதிகாரத்தில் அமர்ந்த தேவ, ரிஷி, பிதிருக்களும் மானிட ஜன்மமெடுத்த ஜீவனைக் கட்டுப்படுத்தக் கருதுகிறார்களாம். மாட்டைக் கட்டுவதற்குக் கயிறு ஸாதனமாவதுபோல் இவனைக் கட்டு

வத்ற்கு நாமம் (பெயர்) கயிறு போலவாம். அதற்காகத்தான் நாமகாணம் மனிதனுய்ப் பிறந்தவனுக்குச் செய்யப்படவேண்டிய தவசியம். அதனுற்றுன் மனிதர்களுக்கெல்லாம் பெயரிடப்படு கின்றது. பசு பக்ஷி முதலியவைகள் நமது வீட்டில் ஜனிப்பினும் அவைகளுக்குப் பெரும்பாலும் பெயரிடுவதில்லை. அப்படியாரேனு மொருவர் அபிமானத்தால் அவைகளுக்குப் பெயரிட்டிருப்பினும் மனிதர்கள் வீட்டில் குழந்தைகளைக் கண்டவுடன் "தங்கள் குழந் தையா" இவனுக்கு என்ன பெயர் என்று கேழ்ப்பதுபோல் ஒரு கன்றுக்குட்டியையோ, நாய்க்குட்டியையோ பார்த்தவுடன் தங்க ளுடையதா இது ? இதற்கு என்ன பெயர் ? என்று பெரும்பா லும் கேழ்பது வழக்கமில்லை. ஆகவே பெயரிடுவதே கயிற்றில் கட்டுவதுபோலவாம். இதனுல் கட்டுப்படுவதில்லையென்ற தோ ஷம் விலகிவிடுகிறதாம். ஆகவே நாமகரண ஸம்ஸ்காரத்திற்கு தோஷத்தை விலக்குவது என்ற தன்மைதகும். இக்கருத்தை சுருதிஸ்மிருதிகள் வெளியிடுகின்றன. அதாவது மனுஷ்யவர்க்கங் களையும் அவர்களால் ஆராதிக்கப்படவேண்டிய தேவர்களது ஆரா தன ரூபமான யக்ஞாதிகளையும் சேர்ந்தே ஸிருஷ்டித்துவிட்டு பிரம்மதேவர் 'இந்த யக்ஞாதி ஸாதனங்களால் நீங்கள் அபிவிரு த்திக்கு வரவேண்டும். இதனுல் தேவர்களை ஆராதியுங்கள். தேவர் கள் உங்களை அனுக்கிரஹிப்பார்கள். இவ்விதம் நீங்களும் தேவர் களும் ஒருவர்கொருவர் ஒத்துழைத்துக்கொண்டு பாமசிரேயஸை அடையவீர்களாக" என்று கர்மாதிகாரம் பெற்றஜீவர்களைநோக்கி உபதேசித்து அவர்களை தேவரிஷி பிதிருக்களுடைய கையில் கொ டுத்தாராம். இது பகவத் கீதையில் வெளிப்படை. இவ்விதம் தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட கர்மாதிகாரம் பெற்ற ஜீவர்களை அந்த தேவர்கள் கடன்காரர்களைப் போலவும் பசுக்களைப் போல வும் தங்களது கட்டுக்குள்ளடக்கி ஆண்டு வருகிறுர்கள். இது தைத்ரீய சுருதியிலும் பிருகதாரண்யத்திலும் பிரசித்தமாயுள்ளது.

தொடரும்.

பத்திராதிபர்.

# மதிப்புரை.

## லகுராமசரிதம்.

—o—

மகோபதேசக சாஸ்திர ரத்நாகர பிருதாலங்கிருதாயும் அத்வைத ஸபாபிரதான பண்டிதரும் பண்டிதகுலதிலகருமானபிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரியளவர்களுடைய புத்திரரான பி.எ., பிஎல் மஹாலிங்ககவி அவர்களாலியற்றப்பட்டு நமது பார்வைக்கு அனுப்பப்பட்ட இப்புத்தகத்தை வரப்பெற்றோம்.

இது தம்பெயருக்குற்றவாறு ஸ்ரீ வால்மீகி மஹரிஷியால் லோகோபகாரத்தின் பொருட்டு அனுக்கிரஹிக்கப்பட்ட ஸ்ரீராமாயணத்தினுடைய ஸங்கிரஹமாயும் ஸாரபூதமாயும் இருக்கின்றது.

இப்புத்தகமும் ஸ்ரீமத்ராமாயணத்தைப் போல் ஆறுகாண்டங்களாகப் பிரிக்கப்பட்டு வடமொழியில் தேவநாகரலிபியில் ஸரளமான பதங்களால் அனுஷ்டுப் விருத்தத்தில் பலரும் சுலபமாய் ஸ்ரீ பகவானுடைய சரித்திரத்தின் ஸாராம்சத்தையறிந்து தன்யர்களாகும்படி தெளிவாய் நல்ல கவிதையில் எழுதப்பட்டிருக்கின்றது. இப்புத்தகம் பாலர்களுக்கு அதிலும் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மிகவும் உபயோகமானது என்று எவரும் அங்கீகரிக்கக்கூடியதே. இக்கருத்தைக்கொண்டுதான் ஸகல மாணவர்களும் சுலபமாய் இதைவாங்கிப் படித்து ஸ்ரீராமபத்திருடை அனுக்கிரஹத்தைப் பெறவேண்டி இதின் விலையும் ஆறணாவென்று குறைவாகஏற்படுத்தப்பட்ருக்கின்றது. இதில் அபேக்ஷையுள்ளவர்கள்— ய- மஹாலிங்கசாஸ்திரியள் பிஎ., பிஎல்.

புதுடபீர்தெரு கும்பகோணம்

என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். **உபபத்திராதிபர்.**

## மிலட்டூர் ஸ்ரீ சிவப்பிரியாம்பாள் ஸம்ஸ்கிருத வித்தியாசாலையின் வார்ஷிக மஹோத்ஸவம்.

**ஷை பாடசாலையின் வித்தியார்த்தி சங்கத்தின் முதலாவது**

**ஆண்டு நிறை விழா.**

**ஷை கொண்டாட்டங்கள் சென்ற 4—12—27 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு ஷை பாடசாலைக் கட்டிடத்தில் நடை**

பெற்றன. அப்பொழுது திருவையார் ஸம்ஸ்கிருத காலேஜ் ஸாஹித்ய ப்ரொபஸர் பிரபமஸ்ரீ சக்ரவர்த்தி அய்யங்கார் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். முதலில் கடவுள் வணக்கமும் பையன்களால் தமிழ் இங்கிலீஷ் இவைகளில் சம்பாஷணையும் சிறுமிகளால் கோபிகா கீதை முதலியவைகள் பாடிக்கொண்டு கோலாட்டமும் நடைபெற்றது பிறகு மாணவர்களால் தமிழில் காலவரிஷி என்ற நாடகத்தின் ஒரு பாகமும் ஸம்ஸ்கிருதத்தில் ஜானகீபரிணயம் என்ற நாடகத்தின் ஒரு பாகமும் நடத்திக் காண்பிக்கப்பட்டது. பிறகு அக்கிராஸனாதிபதியவர்கள் "ஸனாதனதர்மம் என்ற விஷயத்தைப்பற்றியும், தற்கால நிலமை, ஸம்ஸ்கிருதபாஷை அவசியம் கற்கவேண்டியது என்ற விஷயங்களைக் குறித்து வெகு அழகாய் உபன்யஸித்தார்கள். பிறகு எல்லோருக்கும் சந்தனம் தாம்பூலங்கள் வழங்கி இனிது முடிந்தது.

ஸீதாரமசாமா For காரியதரிசி.

---

## ஓர் ஸந்தேஹம்.

கிரஹஸ்தர்கள் ஆசௌசாதி நிமித்தமில்லாமல் ஸாதாரண க்ஷௌரகர்மாவில் கூட ஸர்வாங்கக்ஷவரம் செய்துகொள்ள வேண்டுமென்பது அனேக சிஷ்டர்களின் அபிப்பிராயம். அதற்குத் தகுந்த பிரமாணம் என்னயிருக்கிறது ?

மனுஸ்மிருதியில்

**क्लृत्तकेशनखश्मश्रुर्दान्तः शुक्लांबरः शुचिः ।**

**𑌕𑍢𑌤𑍍𑌤𑌕𑍇𑌶𑌨𑌖𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌰𑍍𑌦𑌾𑌨𑍍𑌤𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌂𑌬𑌰𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 ।**

என்ற சுலோகத்தால் தலைமயிர் முகத்திலுள்ள மீசை முதலியவைகளும் க்ஷவரம் செய்யப்படவேண்டும் என்று கிடைக்கிறது.

பின்னும் யாக்ஞவல்கிய ஸ்மிருதியில்

**क्लृत्तकेशनखश्मश्रुश्शुक्लांबरः ।**

**𑌕𑍢𑌤𑍍𑌤𑌕𑍇𑌶𑌨𑌖𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌶𑍍𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌂𑌬𑌰𑌃 ।**

என்ற சுலோகத்தாலும்

சாண்டில்ய ஸ்மிருதியில்

कृत्तकेशनखश्मश्रुः त्रिषु पक्षेषु गृही वपेत् ।
க்ருத்தகேஶநகஶ்மஶ்ரு: த்ரிஷு பக்ஷேஷு க்ருஹீ வபேத் ।

என்ற சுலோகத்தாலும் முன் சொல்லப்பட்ட அர்த்தம் கிடைக்கிறதேயன்றி லோமவபநம் கிடைக்கவில்லை. சிலர்

आहिताग्नेः द्वयं पर्व द्वादशीच प्रशस्यते ।
भ्रूपकोष्ठैर्विना सर्वं केशलोमानि वापयेत् ॥
ஆஹிதாக்நே: த்வயம் பர்வ த்வாதஶீச ப்ரஶஸ்யதே ।
ப்ரூபகோஷ்டைர்விநா ஸர்வம் கேஶலோமாநிவாபயேத்

என்ற சுலோகத்தினுல் ஸர்வாங்கக்ஷவரம் சொல்லப்பட்டிருக்கிறது எனச்சொல்லுகிருர்கள், அது உசிதமல்ல. அந்த சுலோகம் ஆஹிதாக்னிகளின் க்ஷவரத்தில் பிரமாணமாருமேயன்றி க்ரஹஸ்தர்களுடைய க்ஷவரத்தில் பிரமாணமாகாது. அப்படிப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் பர்வகாலங்களிலும் துவாதசியிலும் க்ஷவரம் செய்து கொள்வதில் தோஷமில்லையென ஏற்படும்

மற்றெரு ஸ்மிருதியிலும்

विनातीर्थं विनायज्ञं मातापित्रोर्मृतिं विना ।
यो वापयति लोमानि सपुत्रः पितृघातकः ॥
விநாதீர்த்தம் விநாயஜ்ஞம் மாதாபித்ரோர்ம்ருதிம் விநா ।
யோவாபயதி லோமாநி ஸபுத்ர: பித்ருகாதக: ॥

என்கிற சுலோகத்தினுல் ஸாதாரண காலங்களில் ஸர்வாங்கக்ஷவரம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் ஆஹிதாக்நி விஷயமான என்ற சுலோகத்தில்

पर्वणिकेशश्मश्रूणि वापयत अपि लोमान्यपि वापयेत् ।
பர்வணிகேஶஶ்மஶ்ரூணி வாபயதி அபி லோமாந்யபி வாபயேத் ।

என்ற சுலோகத்தில் अपि என்ற பதத்தைக் கவனித்தால் ஆஹிதாக்நிகளாகவில்லாதவர்களுக்குஸாதாரண காலங்களில்ஸர்வாங்கக்ஷவரம் செய்துகொள்வதற்குப்பிரமாணமில்லை எனத்தோன்றுகிறது, ஆதலால் ஸாதாரண காலங்களில் ஸர்வாங்கக்ஷவரம் ஆவசியகம்என ஏற்படவில்லை.

விசேஷகாலத்திலோவென்றால்

**आशौचान्ते तु सर्वाङ्ग वपनं श्रुतिचोदितम् ।**

𑌆𑌶𑍌𑌚𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗 𑌵𑌪𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌚𑍋𑌦𑌿𑌤𑌮𑍍 ।

என்ற இத்யாதி சுலோகங்கள் அவசியம் செய்யவேண்டுமென்பதில் பிரமாணமாயிருக்கிறது என்று சிலர் சொல்லுகின்றனர். இதனால் ஆசௌசம் முதலியது இல்லாத காலத்தில்முக்கியமில்லையென ஏற்படுகிறது. இருந்தாலும் சில சிஷ்டர்கள் அவசியமென அனுஷ்டித்து வருகின்றனர்.

ஸாதாரண காலங்களில் ஸர்வாங்கக்ஷவரம் அவசியம் கர்த்தவ்யமா? இல்லையா? என ஏற்படும் ஸந்தேகமானது தகுந்த பிரமாணங்களால் வித்வத் சிகாமணிகளால் இந்த ஆரியதர்மம் மூலமாகவே வெளியிடப்பட்டு நிவாரணம் செய்யப்பட்டால் ஆஸ்திக ஜனங்களுக்கும் அனுகூலமாயிருக்கும்.

மு. ந. ஜானகிராமய்யர்,
முடிகொண்டான்.

---

# ஸந்தேகத்திற்கு உத்தரம்.

## ஆயுஷ்கர்ம (வபன) விசாரம்.

முடிகொண்டான் மகா-௱-ஸ்ரீ மு. ந. ஜானகிராமய்யரவர்களால் 'ஓர் ஸந்தேகம்' என்ற தலையங்கமிடப்பட்டு அனுப்பப்பட்டவபன விஷயமான விசாரம் இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்த விஷயமாக தர்மசாஸ்திர ஆராய்ச்சி செய்ததிலேற்பட்ட ஸித்தாந்தம் பின்வருமாறு— மனிதனாய் பிறந்தவனுக்கு பிறந்தவுடன் வபனம் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அது சிஷ்டாசாரத்தில்லாதபடியால் வேண்டாமென்று வைத்தினாததீக்ஷிதீயத்தில் நிஷேதிக்கப்பட்டது தேவதாப் பிரார்த்தனத்தை முன்னிட்டு திருப்பதிமுதலிய க்ஷேத்திரங்களில் முடிவாங்கி வருகிற வழக்கத்தில் குழந்தைகளுக்கு தலை க்ஷவரம் செய்துவருவது தற்காலமாசாரத்தில் வந்துகொண்டிருக்கிறது. ஆனால் அது சாஸ்திரத்தில் விதிக்கப்படவில்லை. இது நடுக்காவேரியில் விளங்கிவந்த ஸ்ரீமான் பிரம்மஸ்ரீ. கு. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் அவர்களால் தமது பிரம்ம

வித்யா பத்திரிகையில் விரிவாகக்கூறப்படடுள்ளது. மூன்ருவது வயதில் சௌளம் என்று ஒருஸம்ஸ்காரம்சாஸ்திரங்களில் விதிக்கப் படுகின்றது. ஆசாரத்திலும் நடைபெற்று வருகிறது. ஆனுல் அதை மூன்ருவது வயதான முக்கியகாலத்திலேயே செய்விக்கிருர்கள். அதிற் செய்விக்க நேராதவர்கள் உபநயன காலத்தில் அவசியம் செய்விக்கிருர்கள். அதிலும் ஸாமவேதிகளுக்கும் மற்றவர்களுக்கும் பேதமிருக்கின்றது. அந்த சௌளகாலத்தில் க்ஷௌரம் விதிக்கப்படுகின்றது. சௌளதாலத்தில் செய்விக்கப்பட்ட க்ஷௌரப்படி சிகையைத் தவிர மற்ற கேசங்களையும், ச்மச்ரு (மீசை) யுண்டானபிறகு அதையும் ஸ்னுதகவிரதத்தை அனுஷ்டிக்கிற காலம்வரை இடையிலுள்ள காலங்களில் க்ஷௌரம் நேரும் போது செய்துகொள்ளவேண்டியது, வேதத்தை முற்றிலும் அத்தியயனம் செய்தபிறகு ஸமாவர்த்தனகாலத்தில் இந்த ஸ்னுந கர்மம் விதிக்கப்படுகின்றது. அந்தக்காலத்தில் க்ஷௌரம் இதுவரை செய்துவந்தபடி இல்லாமல்: தற்காலம் ஆஹிதாக்கினியல்லாத கிரஹஸ்தர்கள் செய்துகொண்டு வருகிற ஆசாரப்படி விதிக்கப்படுகின்றது. அதாவது விலக்கப்பட்ட புருவம் முதலிய சிலவிடந் தவிர ஸர்வாங்க க்ஷௌரம் விதிக்கப்படுகின்றது. ஆபஸ்தம்ப கிருஹ்யசூத்திரத்தில் இப்படி வியக்தமாகச் சொல்லாவிடினும், போதாயன கிருஹ்யசூத்திரத்தில் விரிவாகக் கூறப்படுகின்றது. அதாவது போதாயன கிருஹ்யம் இரண்டாவது பிரச்னத்தில் ஆருவது அத்தியாயம் ஒன்பதாவது கண்டத்தில் ஸமாவர்த்தனத்தில்

“श्मश्रूण्येवाग्रेवपते । अथोपपक्षौ, अथ केशान् , यथोप-
पातमितराण्यङ्गानि । .................... यएवं विद्वांसो लोमानि
वापयन्ते,सयदि लोमानि वापयिष्यमाणःस्यात् केशश्मश्रुवापयित्वा
लोमानि संहृत्य नखानि निकृन्तयीत ”

“𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍂𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌗𑍍𑌰𑍇𑌵𑌪𑌤𑍇 𑌅𑌥𑍋𑌪𑌪𑌕𑍍𑌷𑍌 𑌅𑌥𑌕𑍇𑌶𑌾𑌨𑍍
𑌯𑌥𑍋𑌪𑌪𑌾𑌤𑌮𑌿𑌤𑌰𑌾𑌣𑍍𑌯𑌙𑍍𑌗𑌾𑌨𑌿.................𑌯𑌏𑌵𑌂
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋 𑌲𑍋𑌮𑌾𑌨𑌿 𑌵𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌯𑌦𑌿 𑌲𑍋𑌮𑌾𑌨𑌿
𑌵𑌾𑌪𑌯𑌿𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍇𑌶𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁 𑌵𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌲𑍋
𑌮𑌾𑌨𑌿 𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 𑌨𑌖𑌾𑌨𑌿 𑌨𑌿𑌕𑍃𑌨𑍍𑌤𑌯𑍀𑌤”

"ச்மச்ருக் (மீசை) களை முதலில் வபனம் செய்து கொள்ள வேண்டும். பிறகு கக்ஷங்களை பிறகு கேசங்களை பிறகு நேர்ந்தபடி. இதர (மற்ற) அங்கங்களை வபனம் செய்துகொள்ளவேண்டும் இவ்விதம் தெரிந்துகொண்டு லோமங்களை (கழுத்துக்குக் கீழ் பட்ட மார்பு, கைகள், கால்கள், முதலிய அங்கங்களிலுள்ள ரோமங்களை) வபனம் செய்துகொள்ளவேண்டும். லோமங்களையும் வபனம் செய்து கொள்ளுகின்றவன், ச்மச்ரு கேசங்களை வபனம செய்துகொண்டு பிறகு ரோமங்களை வபனம்செய்துகொண்டுநகங்களையும் நருக்கிக் கொள்ளவேண்டும். என்று விதிக்கப்பட்டிருக்கின்றது இங்கு கனகஸபாபதிப் பிரயோகக்கிரந்தத்திலும் மனுஷ்ய வபனம் தேவவபனம் அஸுரவபநம் இவைகளின் பேதத்தைச்சொல்லிதேவவபனத்தையாவது மனுஷியவபனத்தையாவது செய்துகொள்ளவேண்டும். தேவவபனத்தால் ஸுவர்க்கத்தை யடைவான். மனுஷய வபனத்தால் ப்ரஜைகள் பசுக்கள் முதலியவைகளை அடைவான். அஸுரவபனம் செய்துகொண்டால் எப்பொழுதும் அபஜயத்தை அடைவானகையால் அதைச் செய்துகொள்ளக்கூடாது என்றும் கூறிவிட்டு

एवं सर्वाङ्गवपनं कर्तव्यं
प्रकोष्ठभ्रूशिखावर्जं वपनं श्रुतिचोदितम् ।
आयुः क्षीणं तपोनाशमज्ञानाद्यदि वापयेत् ॥

"𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌵𑌪𑌨𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂
𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌭𑍍𑌰𑍂𑌶𑌿𑌖𑌾𑌵𑌰𑍍𑌜𑌂 𑌵𑌪𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌚𑍋𑌦𑌿𑌤𑌂
𑌆𑌯𑍁𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌤𑌪𑍋𑌨𑌾𑌶𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌦𑌿 𑌵𑌾𑌪𑌯𑍇𑌤𑍍" ॥

இங்கனம் ஸர்வாங்கக்ஷௌரம் செய்துகொள்ளவேண்டும். மணிக்கட்டுக்குமேல் முழங்கைக்குக் கீழுள்ள முன்கைகள் புருவம்சிகை இவைகளைத் தவிர மற்றயெல்லா அங்கங்களிலும் வபனம் சுருதியில் விதிக்கப்பட்டது. (இது சாகை முதல் அஷ்டகம் 5-வது பிரச்னம் 6-வது அனுவாகம் முதலில் பிரஸித்தமாயுள்ளது) இப்படித் தெரிந்து கொள்ளாமல் கண்டபடி செய்துகொண்டால் ஆயுஸ் குறையும் செய்ததவம் நசித்துவிடும். என்று விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றது. அங்கனமே காதிரகிருஹிய சூத்திரம் 3வது படலம் 1-வது கண்டத்தில்

" वापयेत शिखावर्जं केश श्मश्रु लोम नखानि "

வாபயேத ஶிகாவர்ஜம் கேஶ ஶ்மஶ்ரு லோம நகாநி

சிகையைத் தவிர கேசம் ச்மச்ரு ரோமம் நகம் இவைகளை வபனம் செய்துகொள்ளவேண்டும். என்று ஸமாவர்த்தனப் பிரகாணத்தில் ஸர்வாங்க வபனம் விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரகாரந்தான் கிரகஸ்தனுன பிறகு அக்னிஹோத்திரியல்லாதவனுயினும் அக்னிஹோத்திரியாயினும் மேல் ஆசிரமத்தை ஸ்வீகரிக்கின்ற காலம் வரை வபனம் செய்துகொள்ளவேண்டியது போதாயன கிருஹ்யம் 5-வது பிரச்னம் 14-வது கண்டத்தில்

" केश श्मश्रु लोम नखवापनेनैव प्रतिपद्यते "

"கேஶ ஶ்மஶ்ரு லோம நக வாபநேநைவ ப்ரதிபத்யதே"

என்றும், 14-வது பிரச்னம் 3-வது அத்தியாயம் 5-வது கண்டத்தில் ஸ்னுதகவிரதம் சொல்லுமிடத்தில்

" पर्वसु च केश श्मश्रु लोम नख वापनं "

"பர்வஸு ச கேஶ ஶ்மஶ்ரு லோம நக வாபநம் ॥

என்றும் ஸர்வாங்கவபனம் பர்வங்கள் தோறும விதிக்கப்படுகின்றது. அதனுல் இந்த ஸர்வாங்கவபனம் ஸமாவர்த்தன காலத்திற்குன் பிறகு கிடையாதென்று சங்கிக்க இடமில்லை அங்கனமாயின் ஸ்னுதகனுக்கு விதிக்கப்பட்ட இரண்டு யக்ஞோபவீதம் (பூணூல்) தரித்தல் முதலியவைகளும் ஸமாவர்த்தனகாலத்தில் மாத்திரமென்ருய் விடும். ஏழாவது பிரச்னத்தில் 8-வது கண்டத்தில்

" उक्तं समावर्तनं, समावर्तनप्रभृति "

உக்தம் ஸமாவர்தநம் ஸமாவர்தநப்ரப்ருதி ॥

ஸமாவர்த்தனம் முதற்கொண்டு என்று கூறப்படுவதால் பிந்தியும் இதேவிதமாகத்தான் வபனம் விதிக்கப்பட்டதாகின்றது. இவ்விதம் போதாயனஸூத்திரத்திலும் காதிரஸூத்திரத்திலும் காணப்படுவதால் இந்த ஸர்வாங்கவபனம் அந்த ஸூத்திரிகளுக்கு மாத்திரந்தானென்று சங்கை செய்யக்கூடாது. அப்படியானுல் ஸமாவர்த்தனம் செய்துகொண்ட ஆபஸ்தம்பியானவனுக்கு இரண்டு பூணூல் தரித்தல் முதலியவைகள் எங்கிருந்து எடுத்துக்கொள்

ளக் கூடியதாகும் முக்கியமாய் உபநயனப் பிரயோகத்திலேயே யக்ஞோபவீதத்தைப்பற்றி ஆபஸ்தம்ப மகரிஷி ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. அது யாதுபற்றி தமது ஆசாரியரான போதாயன மகரிஷி விரிவாய்க் கூறியிருப்பதையெடுத்துக் கொள்வார்களென்ற கருத்தாலாமென்க. இது ஸூத்திர ஆராய்ச்சி செய்தவர்களுக்கு இலகுவாய் புலப்படும். மஹான்களான அப்பய்யதீக்ஷித பாதாள் அவர்களும் இக்கருத்தையே

“ यज्ञोपवीतमिव विस्मृतमर्चनं ते ”

𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌮𑌿𑌵 𑌵𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑌰𑍍𑌚𑌨𑌂 𑌤𑍇

ஓ பரமேசுவர ஆபஸ்தம்பமஹரிஷி உபநயனாதிகளில் யக்ஞோபவீதத்தை மறந்துவிட்டதுபோல் தம்முடைய பூஜையையும் மறந்துவிட்டார்போலும் என்று விளக்கியிருக்கிறார்கள். அதனால் ஒரு ஸூத்திரத்தில் சொல்லப்படாத விசேஷம் வேறு ஸூத்திரங்களிலிருந்தும் பெரும்பாலும் போதாயன ஸூத்திரத்திலிருந்தும் கிரகித்துக்கொள்ள வேண்டியது என்று

स्वसूत्रेऽविद्यमाने तु परसूत्रेण वर्तते ।
बोधायनमतं कृत्वा स्वसूत्रफलभाग्भवेत् ॥

𑌸𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌽𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌤𑍁 𑌪𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌮𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌫𑌲𑌭𑌾𑌗𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।

தன் ஸூத்திரத்திலில்லாவிடில் வேறு ஸூத்திரத்திலிருந்து கிரகிக்கலாம் போதாயந மஹரிஷி கூறியபடிசெய்தால்தன் ஸூத்திரப்பயனை அடைந்துவிடுவான் என்பதாதி வசனங்களால் அறியப்படுகின்றது. அதனாற்றான் உபாகர்மத்தன்று பிரம்மசாரிகளுக்கு வைகானஸ ஸூத்திரத்தில் விதிக்கப்பட்ட வபனம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே அக்கினிஹோத்திரியல்லாத கிரஹஸ்தனும் ஸமாவர்த்தனம் முதல் மேல் ஆசிரமம் ஸ்வீகரிக்குங்காலம்வரையில் அக்கினிஹோத்திரியாய்விட்டாலும் ஸர்வாங்க வபனம் செய்துகொள்ளவேண்டியது என்றேற்படுகிறது. அஷ்டாங்கஸங்கிரஹத்தில் தினசரி அனுஷ்டானத்தை விதிக்கும் தினசரியாத்தியாயத்தில்

“ त्रिः पक्षस्य च श्मश्रु नखरोमाणि वर्धयेत् ”

𑌤𑍍𑌰𑌿𑌃 𑌪𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌚 𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁 𑌨𑌖𑌰𑍋𑌮𑌾𑌣𑌿 𑌵𑌰𑍍𑌧𑌯𑍇𑌤𑍍 ।

ஒரு பக்ஷத்திற்கு மூன்று தடவை ஸர்வாங்கவபனம் செய்துகொள்ளவேண்டும் என்று பொதுவாய் கிரஹஸ்தர்களுக்கு ஸர்வாங்கவபனம் உபதேசிக்கப்படுகின்றது. மனுஸ்மிருதியில்ஸர்வாங்கவபனம் கூறப்படவில்லையே யென்றால் கூறுவாம். ஆங்கு கிரஹஸ்த தர்மபிரகாணத்திலும்வாநப்பிரஸ்ததர்மபிரகாணத்திலுமாகவிரண்டு விடத்தில் வபனம்கூறப்பட்டிருக்கின்றது. கிரஹஸ்த தர்மமான வபனத்தில் கேசாதிகளைக்கூறனது ரோமங்களுக்கு முபலக்ஷணமாக கிரக்ஷித்துக் கொள்ளவேண்டும். இதுபோலவே மற்ற ஸ்மிருதிவசநங்களுக்கும்பொருள்கொள்ளவேண்டும். அங்ஙனமாயின் ஆசௌசமுடிவில் ஸர்வாங்க வபனத்தை விசேஷித்து விதிப்பது எதற்காகவென்று சங்கிக்கலாம் தஹனதினத்தன்று கழுத்து பரியந்தம் வபனத்தை விதித்திருப்பதால் ஆசௌச முடிவிலுமப்படித் தானேயென்று ஸந்தேகம் நிகழ அதை விலக்குவதற்காக தகனதினத்தில் மாற்றப்பட்ட ஸர்வாங்க வபனத்தை மீண்டும் விதிப்பதாகவெண்ணி அந்த சங்கைக்கு ஸமாதானம் கொள்ளவேண்டும்.

विनातीर्थं विनायज्ञं मातापित्रोर्मृतिं विना ।
यो वापयति लोमानि सपुत्रः पितृघातकः ॥

விநா தீர்த்தம் விநாயஜ்ஞம் மாதாபித்ரோர்ம்ருதிம் விநா ।
யோவாபயதி லோமாநி ஸபுத்ர: பித்ருகாதக: ॥

தீர்த்தம், யக்ஞம, மாதாபிதாக்களின் மாணம் இவைகளைத் தவிர மற்றகாலத்தில் ரோமங்களை வபனம் செய்துகொண்ட புத்ரன் பிதிருக்களைக்கொன்றவனாவான்.

என்று மற்றொரு ஸ்மிருதி வசனமாகக் கூறப்பட்டதில் மாதாபிதாக்களின்மாணந்தவிர மற்ற காலங்களில் ரோமங்களை வபனம் செய்துகொள்வது தோஷமென்று ஏற்படுகின்றது. அப்படியானல் ஞாதிகளின் மாணத்தில் ஞாதிகளுக்கு 10-வது நாளில் ஸர்வாங்க வபனம் விதிக்கப்படுவது முறணைபடும். இதைப்பற்றிய மற்றுமுள்ள விசாரத்தை ஸம்ஸ்காரமென்று எழுதிவரும விஷயத்தில் சௌளம் என்ற ஸம்ஸ்காரத்தைப்பற்றி எழுதும்போது விவரிப்போம்.

சுபம்!

பத்திராதிபர்.